VIRUDHUNAGAR MUNICIPALITY

FORM 3

Minutes of the Meeting held on 29.03.2022

| Date of Council meeting | Decision Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 29.03.2022 | 1 | **பொருள் : 1**<br>விருதுநகர் நகராட்சியின் 2022-2023ம் ஆண்டிற்கான வருவாய் மூலதனநிதி, குடிநீர் வடிகால் நிதி, ஆரம்ப கல்வி நிதி ஆகிய வகைகளுக்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மன்றம் ஒப்புதல் செய்யலாம்.<br>ந.க.எண்.528/2022/பி2 | ஒப்புதல் செய்யப்பட்டது |
| | 2 | **பொருள் : 2**<br>நகராட்சி ஆணையர் அவர்களின் பிப்ரவரி 2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : பதிவு செய்யலாம்<br>கோப்பு எண் : 3431/2021/சி1 | பதிவு செய்யப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>3</td>
<td>
<u>பொருள் : 3</u><br>
விருதுநகர் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி முறையே தரம் பிரித்து பணி மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து மற்றும் திறந்த வெளி சிறுநீர் , மலம் கழிக்காத பகுதியாக அறிவிப்பு கீழ் கண்ட நாளிதழிகளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது அதன் பட்டியல் தொகை கோரப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பட்டியல் விவரம்</th><th>தொகை.ரூ</th></tr>
<tr><td>1</td><td>தினமணி நாளிதழ்<br>Express Publications (Maduri) PVT LTD<br>MDUTN30074220 நாள். 26.02.2022</td><td>SCGST . CGST வரி உட்பட<br>தொகை ரூ 5939/–</td></tr>
<tr><td>2</td><td>தினமலர் நாளிதழ்,M/r.Marisuresh<br>KVB VIRUDHUNGR BRNCH<br>பில் எண் 432 நாள். 26.02.2022</td><td>SCGST . CGST வரி உட்பட<br>தொகை ரூ 7409/–</td></tr>
</table>
மேற்காண் விளம்பர கட்டணம் பட்டியல் தொகை செலவினத் தொகை ரூ.5939/– மற்றும் தொகை ரூ 7409/– ஆகும் அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.<br>
கோப்பு எண்.3945/2020 /எச்1
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>4</td>
<td>
<u>பொருள் : 4</u><br>
இந்நகராட்சிப் பகுதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தில் கூடுதல் கட்டிட வசதிகள் மேற்கொள்வதற்கு தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் (NUHM ROP) 2021–22ம் ஆண்டின் கீழ் ரூ.45,00,000/–ற்கு அனுமதி அளித்துள்ளது.( இயக்குநர்,தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் , சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.1869/தே.ந.சு.இ/எஸ்எச்எஸ்/2015 நாள்.18.10.2021) அதன்படி இந்நகராட்சிக்குச் சொந்தமான பழைய அருப்புக்கோட்டை ரோடு அண்ணாமலையார் நகர்ப்புற மகப்பேறு மருத்துவமனையில் கூடுதல் கட்டிட வசதிகள் செய்வதற்கு உண்டான உத்தேச மதிப்பீடு ரூ.45,00,000/–ம் தயார் செய்யப்பட்டுள்ளதற்கும் அதன் செலவினத்தினை தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் 2021–22ம் ஆண்டின் கீழ் மேற்கொள்வதற்கும் கூடுதல் செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.<br>
கோப்பு எண்.7014/2019/இ1
</td>
<td>அனுமதிக்கப்பட்டது<br>இப்பொருளில் அண்ணாமலையார் என்று உள்ளதை S.V.அண்ணாமலையம்மாள் என்ற திருத்தத்துடன் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 5 | **பொருள் : 5**<br>விருதுநகர் நகராட்சியில் திரு.மார்த்தாண்டம் என்பவர் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து 31.05.2018 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றார். அன்னார் தான் வருவாய் உதவியாளராக கூடுதல் பொறுப்பு பார்த்து வந்த காலத்தினையும் வரன்முறைப்படுத்தி அதற்குரிய பணப்பலன்களோடு ஓய்வூதியம் வழங்ககோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் WP.(MD).No.12508/2020 எண்ணில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் விருதுநகர் நகராட்சி ஆணையர் அவர்களை 3-ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வாதாட அரசு சிறப்பு கூடுதல் வழக்கறிஞர் A.K.மாணிக்கம் அவர்களை நியமனம் செய்வதற்கும், வழக்கறிஞருக்கு ரூ.10,000/- செலவினம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் .<br>ந.க.எண்.5147/2021/சி1 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| | 6 | **பொருள் : 6**<br>இந்நகராட்சி பகுதிகளில் உள்ள ஆழ்துளை மின்விசைப்பம்புகள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் உள்ள மின் சாதனங்கள் பராமரிப்பு பணிக்கு தேவையான மின் உதிரிப் பொருட்களான வயர்கள், பியூஸ் கேரியர், மின்மோட்டார்களின் Starter-ல் உரிய மின் உதிரிப் பொருட்களை 2022-2023-ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று குடிநீர் நிதியில் இருந்து வாங்கிக் கொள்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.50 (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>கோப்பு எண்.இ2/1218/2022 | அனுமதிக்கப்பட்டது |
| | 7 | **பொருள் : 7**<br>இந்நகராட்சி பொது சுகதார பிரிவு துாய்மை பணியாளர்களுக்கு தளவாட சாமான்கள் போதிய அளவில் இல்லதாலும் அத்தியாவசிய அவசரம் கருதி பொதுசுகாதாரம் தொடர்பணி மேற்கொள்ள கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பொருட்களை கொள்முதல் செய்யும் பணிக்கென ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.5,00000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது. 24 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் தோ.ஜெயக்குமார் ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது |

| வ.எண் | பொருட்கள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மண்வெட்டி | 60 எண்ணம் |
| 2 | மூங்கில் மாறு | 80 எண்ணம் |
| 3 | தென்னங் கூச்சமாறு | 500 எண்ணம் |
| 4 | தட்டு | 75 எண்ணம் |
| 5 | அன்னகூடை | 50 எண்ணம் |
| 6 | அகப்பை(ஜோடி) | 100 ஜோடி |
| 7 | மண் தள்ளும் பிடில் | 50 எண்ணம் |
| 8 | முள்கம்பி | 50 எண்ணம் |
| 9 | கடப்பாறை | 25 எண்ணம் |
| 10 | வெட்டு அறுவாள் | 25 எண்ணம் |
| 11 | பெரிய இரும்பு வாளி | 25 எண்ணம் |
| 12 | சிறிய இரும்பு வாளி | 25 எண்ணம் |
| 13 | பூ வாளி | 25 எண்ணம் |
| 14 | மூங்கில் கூடை | 50 எண்ணம் |
| 15 | தட்டோடு | 100 எண்ணம் |
| 16 | கரண்டி | 50 எண்ணம் |
| 17 | டாயிளட் பிரஸ் | 50 எண்ணம் |
| 18 | மாப் | 40 எண்ணம் |
| 19 | வாறுகால் கரண்டி (கைபிடி நீளமானது) | 100 எண்ணம் |

அலுவலகக்குறிப்பு—மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்: எச்1/1129/2021

| | | | |
|---|---|---|---|
| | 8 | **<u>பொருள் : 8</u>**<br>இந்நகராட்சிப் பகுதிகளில் KFW திட்டம் 2021–22ம் ஆண்டின் கீழ் நகராட்சிக்குட்பட்ட மாத்தநாயக்கன்பட்டி உரக்கிடங்கில் உயிர் உரம் தயாரிக்கும் (Bio-mining) பணிக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ150.00 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ளது.இப்பணிக்காக சர்வே பணியினை மேற்கொள்வதற்கு உண்டான ஆய்வறிக்கை கட்டணம் ரூ.1,77,000/–த்தை வங்கி வரைவோலையாக செலுத்தக்கோரி இயக்குநர், அண்ணா பல்கழைக்கழகம், சென்னை அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. அத்தொகையினை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு–மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.7314–1/19/இ1 | அனுமதிக்கப்பட்டது |
| | 9 | **<u>பொருள் : 9</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான ஆணைக்குட்டம் காரிசேரி கல்குவாரி , ஓண்டிப்புலி கல்குவாரி , கோடைகால நீர்த்தேக்க மற்றும் நகரில் உள்ள OHT நீரேற்று நிலையங்களில் இருந்து இயக்கப்படும் நீர் உந்துகள் மின் மோட்டார்கள் அடிக்கடி பழுது ஏற்படும் பொருட்டு சரிசெய்வதற்கு குடிநீர் அவசர அவசியம் கருதி உடனடியாக பழுது நீக்கம் செய்வதற்க்கு AMC ஆண்டு பராமரிப்பு பணி 2022-2023-க்கு மேற்கொள்ளவதற்க்கு உத்தேச செலவு தொகை ரூபாய்-4,00,000 /- ரூபாய் மட்டும் குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது<br>அலுவலக்குறிப்பு : மன்றம்அனுமதிக்கலாம்<br>**கோப்பு எண் :** இ2/1353/2022 | அனுமதிக்கப்பட்டது |
| | 10 | **<u>பொருள் : 10</u>**<br>இந்நகராட்சிப் பகுதிகளில் உள்ள 389 எண்ணம் ஸ்டோக் பம்பு மற்றும் கம்ப்ரசர் பம்புகளில் பயன்படுத்தப்படும் சிங்கிள் மற்றம் டபுள் சிலிண்டர்கள், கம்பரசர் பம்புகள் 2HP, 3HP மின்மோட்டார்கள் அலுவலக கட்டிடங்களில் உள்ள மின்விசிறிகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு 2022-2023ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்வதற்கு உத்தேச செலவு தொகை | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | ரூ.9,50,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும ) குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்: இ2/1504/2022 | |
| | 11 | **<u>பொருள்: 11</u>**<br>இந்நகராட்சியின் பயன்பாட்டில் உள்ள பேட்டரி மூலம் இயங்கும் 44 வாகனங்களுக்கு 2022–23ம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்வதற்கு உண்டான உத்தேச மதிப்பீடு ரூ.9,50,000/–ம் ஆகும். அதன் செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு–மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.1489/2022/இ1 | அனுமதிக்கப்பட்டது |
| | 12 | **<u>பொருள்: 12</u>**<br>இந்நகராட்சியில் 15வது நிதிக்குழு கட்டிய மானியம் 2021–22 –கோடை கால சேமிப்பு தொட்டியில் பம்பிங் மெயின் மாற்றும் பணி (மதிப்பீடு ரூ. 50.00இலட்சம்.) மற்றும் எம்.எஸ்.பி.இராவ் பகதூர் உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் நகர்ப்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையம் 2021–22 (மதிப்பீடு ரூ. 25.00இலட்சம்.) கட்டிடம் கட்டும் பணியினை **21.01.2022ந் தேதியில் நடைபெற்ற மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளை** மாநில அளவில் டெக்கான் கிரானிக்கல் ஆங்கில தினசரி நாளிதழிமும் மற்றும் மாலைமலர் நாளிதழிமும் வெளியிட்டமைக்கு உண்டான செலவினத் தொகை ரூ.51,206/–யை வழங்கக் கோரி Sutha ads அவர்களிடமிருந்து பில் பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு–மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.5145–3/2021/இ1 | அனுமதிக்கப்பட்டது |
| | 13 | **<u>பொருள்: 13</u>**<br>இந்நகராட்சியில் 15வது நிதிக்குழு கட்டிய மானியம் 2021–22 –கோடை கால சேமிப்பு தொட்டியில் பம்பிங் மெயின் மாற்றும் பணி (மதிப்பீடு ரூ. 50.00இலட்சம்.),15வது நிதிக்குழு கட்டப்படாத மானியம் 2021–22 –ஆனைக்குட்டம் தலைமை நீரேற்று நிலைய வளாகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல் (மதிப்பீடு ரூ. 35.00இலட்சம்.) மற்றும் எம்.எஸ்.பி.இராவ் பகதூர் உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் நகர்ப்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையம் 2021–22 (மதிப்பீடு ரூ. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **25.00**இலட்சம்.) கட்டிடம் கட்டும் பணியினை **23.03.2022ந் தேதியில் நடைபெற்ற மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளை** மாவட்ட அளவில் தினகரன் தினசரி நாளிதழில் வெளியிட்டமைக்கு உண்டான செலவினத் தொகை ரூ.6,703/—யை வழங்கக் கோரி Kal Publications (P) Limited அவர்களிடமிருந்து பில் பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை பொது நிதியின் கீழ் அன்னாருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு—மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.**5145—3/2021/இ1** | |
| | 14 | **<u>பொருள் : 14</u>**<br>விருதுநகர் நகராட்சியின் அரசுபள்ளி **1** மற்றும் நகராட்சி பள்ளிகள் **11** க்கும் கழிப்பறைகளை பராமரிப்பு மற்றும் துப்புரவுபணிகள் மேற்கொள்ள **15** துப்புரவு பணியாளர்களை கொண்டு பள்ளி வேலை நாட்கள் **130** க்குரியதற்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார்மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் விருதுநகர் அவர்களின் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதம் ,தேவையான உபகரணங்களை கொண்டு பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் **872** நாள் **25.02.2021—** ல் தொகை ரூ.**9,94,749** இலட்சம் மதிப்பீட்டில் **பொது நிதியில்** இருந்து பணிக்குரிய செலவினங்களை மேற்கொள்ள அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் **25.02.2021**ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன, ஒப்பந்தப்புள்ளிகள் **26.08.2021** அன்ற திறப்பு செய்யப்பட்டு குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள M/s.Evergreen Evirovement Services Ramanathapuram ஒப்பந்தப்புள்ளியினை இந்நகர் மன்ற தீர்மானம் எண் **104** நாள் **31.08.2021** அன்று அனுமதி அளிக்கப்பட்டு பணி உத்தரவு நாள் **01.09.2021**ல் வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு அதற்கான செலவு பட்டியல் பிப்ரவரி **2022** வரை ரூ**9,61,000/—**இலட்சம் வழங்கப்பட்டு உள்ளது, **மேற்படி பள்ளிகளின்** பொதுசுகாதராம் பணி அத்திவாசிய அவசியம் கருதி **01.03.2022** முதல் **31.05.2022** வரை மேற்படி நிறுவனத்தின் மூலம் பள்ளி வேலைநாட்களில் **மேற்கொள்ளவும்** அதற்கான செலவினத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு— **1) மேற்படி செலவினத்தை கல்வி நிதியில் செய்ய** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** M/s .Evergreen Evirovement Services, Ramanathapuram நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டுவருவதையும் மன்றம் ஏற்கலாம்.<br>**கோப்பு எண் : எச்1/1129/2021** | ஏற்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 15 | **பொருள் : 15**<br>விருதுநகர் நகராட்சியின் பொது சுகாதாரம் பிரிவில் 36 வார்டு களுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளான வீடுகள் தோறும் கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அபேட் மருந்து தெளித்தல் , புகைமருந்து அடித்தல் போன்ற டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள 46 நபர்களை கொண்டு 01.10.2021 முதல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி தரவிலை விகிதத்தில் இந்நகர் மன்ற தீர்மானம் எண் 1053 நாள் 30.09.2021– ன் பிரகாரம் ஒராண்டிற்கான செலவினம் தொகை ரூ 68.88 இலட்சத்தில் ஆதவன் மகளிர் சுயஉதவி குழு விருதுநகர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>இந்நகராட்சி பகுதியின் 25948 வீடுகளுக்குகென 86 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை அமர்த்தி காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணி மேற்கொள்ளுமாறும் முறையான வழி முறைகளை பின்பற்றி பொது சுகாதாரம் இணை இயக்குநர் சுகாதராப்பணி அவர்களால் அறிவுறுத்தப்பட்டு உள்ளது, நோய் பரவலை தடுக்கும் பொருட்டு தற்போது போதிய நபகள் இல்லாமல் உள்ளதால் பல்வேறு வார்டு பகுதிகளில் கொசு தொல்லை அதிகமாகவும் மற்றும் பிற நோய்கள் பரவாமல் தடுக்கவும் நகர்மன்ற தலைவர் அவர்களின் கடிதம் நாள் 16.03.2022ல் கோரப்பட்டு உள்ளது மேற்காண் பணி செய்து வரும் தனியார் சுய உதவி குழு மூலம் கூடுதலாக 18 நபர்களை சேர்த்து இப்பணி மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. ஆகையால் 01.04.2022 முதல் 6 மாதங்களுக்கு பணி மேற்கொள்ள ஆகும் கூடுதல் செலவினம் தொகைரூ.14.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு. 1) மன்றம் அனுமதிக்கலாம். 2) ஆதவன் மகளிர் சுய உதவி குழு, விருதுநகர் கடிதம் 18.03.2022ல் ஏற்கனவே பெறும் தரவிலைபடி ரூ.416/–வீதம் பெற்று கூடுதல் நபர்களுக்கு சேர்த்து கொள்ள சம்மதம் தெரிவித்துளார், எனவே ஆதவன் மகளிர்சுயஉதவி குழு மூலம் கூடுதல் நபர்களை சேர்த்தும் இப்பணியினை 01.04.2022 முதல் 30.09.2022 முடியமேற்கொள்ளவும் அதன் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண் : ந.க..எண்.எச்1/4598/2021 | அனுமதி தரப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 16 | **பொருள் : 16**<br><br>இந்நகராட்சி 36 வார்டு பகுதிகளில் உள்ள அனைத்து தெரு விளக்குகளையும் (3353 எண்ணம்) பராமரித்தல் மற்றும் இயக்குதல் பணிகளை 01.09.2018 முதல் M/s. சாமுராய் இண்டஸ்ரியல் எலக்ட்ரிக்கல்ஸ் திருநெல்வேலி நிறுவனம் செய்து வருகின்றது . முதன்மை தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண்29045/2019/DO2/ நாள்.13.10.2020ன் அனுமதியின் படி மேற்படி நிறுவனத்தின் பணிக்காலம் 31.8.2021-ல் நிறைவு பெற்றது. மேற்படி பணிகளை புதிய ஒப்பந்தப்புள்ளி பெற்று தொடர நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.கஎண்.இ2/2560/2021 நாள்.22.07.2022 தேதியில் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது . தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசியம் கருதி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி வரும் வரை ஏற்கனவே பணி செய்து வரும் சாமுராய் இண்டஸ்ரியல் எலெக்ட்ரிக்கல்ஸ் - திருநெல்வேலி நிறுவனமே பழைய விலை விகிதத்திலேயே 01.09.2021 முதல் 31.03.2022 வரை இந்நகர் மன்றத்தீர்மான எண்.1022 நாள்.31.08.2021 மற்றும் தீர்மான எண் 1096 நாள்.30.11.2021-ன் படி அனுமதி பெற்று தெருவிளக்கு பராமரிப்பு பணி நடைபெற்று வருகின்றது. தற்போது பணி நீட்டிப்பு காலம் 31.03.2022-ல் நிறைவு பெறுவதைத் தொடர்ந்து 01.04.2022 முதல் 31.03.2023 வரை அல்லது நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் இருந்து உத்திரவு பிறப்பிக்கும் காலம் வரை இதில் எது முந்தியோ அதுவரை பழைய விலை விகிதத்திலேயே சாமுராய் இண்டஸ்ரியல் எலெக்ட்ரிகல்ஸ், திருநெல்வேலி நிறுவனம் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.34,00,000/- (ரூபாய் முப்பத்து நான்கு இலட்சம் மட்டும்) பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு: பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்இ2/475/2018 | அனுமதி தரப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>17</td>
<td>

**<u>பொருள் : 17</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மின் மோட்டார்கள் மாற்றும் பணி (நகராட்சி ஆனைக்குட்டம் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் மதுரை ரோட்டில் உள்ள நீரேற்று நிலையம்–17 எண்ணம் ) பணியினை 15வது நிதிக்குழு கட்டப்படாத மானியம் 2021–22 ம் ஆண்டின் கீழ் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத் தீர்மான எண்.1078.நாள்.17.11.2021ன்படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 16.03.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வஎண்</th><th>ஒப்பந்ததாரா் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.என்.பாண்டியராஜ்,விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.04 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஜீ.செல்வேந்திரன்–விருதுநகர்.</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 7.11 சதவிகிதம் அதிகம்.</td></tr>
</table>

அலுவலகக் குறிப்பு- வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள **திரு.என்.பாண்டியராஜ், ஒப்பந்ததாரா், விருதுநகர்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண் : இ1/5145–3/2021

</td>
<td>ஏற்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>18</td>
<td>

**<u>பொருள் : 18</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஆனைக்குட்டம் தலைமை நீரேற்று நிலைய 125 KVA ஜென்செட்டிற்கான நிலத்தடி செப்பு கேபிளை மாற்றும் பணியினை 15வது நிதிக்குழு கட்டப்படாத மானியம் 2021–22 ம் ஆண்டின் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத் தீர்மான எண்.1078.நாள்.17.11.2021ன்படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 16.03.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

</td>
<td>ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வஎண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.என்.பாண்டியராஜ்,விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.82 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஜீ.செல்வேந்திரன்–விருதுநகர்.</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 17.25 சதவிகிதம் அதிகம்.</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு- வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள திரு.என்.பாண்டியராஜ், ஒப்பந்ததாரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
கோப்பு எண் : இ1/5145–3/2021
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>19</td>
<td>
<u>பொருள் : 19</u><br>
இந்நகராட்சிக்குட்பட்ட புல்லலக்கோட்டை சாலையில் அமைந்துள்ள சுடுகாட்டில் மர நிலக்கரி தகனத்தை எல்.பி.ஜீ.பயோ கேஸ் தகன மேடையாக மாற்றும் பணியினை 15வது நிதிக்குழு கட்டப்படாத மானியம் 2021–22 ம் ஆண்டின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத் தீர்மான எண்.1078.நாள்.17.11.2021ன்படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 16.03.2022ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் ஆன்லைன் மூலமாக எந்தவித ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்படவில்லை .ஆப்லைன் மூலமாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வஎண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>எம்/எஸ். எஸ்.ஜீ.எஸ்.சர்வீசஸ்,சென்னை</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.13 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>எம்/எஸ். விஷ்ணு பேப்ரிக்கேசன் அண்ட் டிசைனிங் ஒர்க்ஸ்–சென்னை.</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.33 சதவிகிதம் அதிகம்.</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு- வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள எம்/எஸ். எஸ்.ஜீ.எஸ்.சர்வீசஸ்,சென்னை, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
கோப்பு எண் : இ1/5145–3/2021
</td>
<td>ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>20</td>
<td>
<u>பொருள் : 20</u><br>
வழங்கல் மற்றும் விநியோகம் திரவ குளோரின் எரிவாயு ஆலை ( 2 எண்ணம்) பணியினை 15வது நிதிக்குழு கட்டப்படாத மானியம் 2021–22 ம் ஆண்டின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத் தீர்மான எண்.1078.நாள்.17.11.2021ன்படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 16.03.2022ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் ஆன்லைன் மூலமாக எந்தவித ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்படவில்லை .ஆப்லைன் மூலமாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>எம்/எஸ். ஸ்ரீ சபரி என்ஜீனியரிங்,சென்னை</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.59 சதவிகிதப் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>எம்/எஸ். ஸ்ரீ ராஜ கணபதி என்ஜீனியரிங் ஒர்க்ஸ்–ஆவடி.</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.91 சதவிகிதப் அதிகம்.</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு- வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள எம்/எஸ். ஸ்ரீ சபரி என்ஜீனியரிங்,சென்னை, விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
கோப்பு எண் : இ1/5145–3/2021
</td>
<td>ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>